**தலைப்பு 176 – துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 176 – துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திறைசேரி ஏற்பாடுகளின் பிரகாரம் முற்பணம் பெறுவனவுகள் (SA-52) ரூபா 22,907,740 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 15,152,783 ஆக அதாவது ரூபா 7,754,957 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 22,907,740 ஆகக் காட்டப்பட்டிருந்ததானது முற்பணங்கள் பி கணக்கில் இடம்பெற்ற பிழைகள் மற்றும் பீழைகளை சரிசெய்தல்களின் மொத்தமாக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 15,152,783 பெறுமதியினுள் பிழைகள் அல்லது பிழைகளின் சரி செய்தல்களின் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. நிதிக் கூற்றுக்களில் முற்பணத் தரவுகள் பெற்றுக்கொண்ட ஏ.சீ.ஏ-5 படிவத்தில் நி.பி 503(1) இன் கீழ் இடம்பெற்ற வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள் நீக்கிய பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளது என | அரசாங்க கணக்குகள் சுற்றிறக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றின் தரவுகளை திறைசேரி ஏடுகளின் பிரகாரம் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்புக்களின் மூலமும் காட்டப்பட்டுள்ளது. | |
| (ii) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் (SA - 52) ரூபா 21,464,778 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 13,709,820 ஆக அதாவது ரூபா 7,754,958 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பணங்கள் கொடுப்பனவுகள் ரூபா 21,464,778 காட்டப்பட்டிருந்ததானது முற்பணங்கள் பி கணக்கில் இடம்பெற்ற பிழைகள் மற்றும் பிழைகளை சரிசெய்தல்களின் மொத்தமாக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 13,709,820 பெறுமதியினுள் பிழைகள் அல்லது பிழைகளை சரிசெய்தல்களின் பெறுமதி உள்ளடங்கியிருக்கவில்லை. நிதி செயலாற்றல் கூற்றிற்கான முற்பணத் தரவுகளை பெற்றுக்கொண்ட ஏசீஏ- 5 படிவத்தில் நி.பி 503 (1) இன் கீழ் இடம்பெற்ற வரவு மற்றும் செலவுப் பெறுமதிகளை நீக்கிய பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளது என குறிப்புக்களிலும் காட்டப்பட்டுள்ளது. நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள முழுச் செலவுகளின் பெறுமதி ரூபா 2,813,893,282 சரி எனவும், பிழையான வரவும் செலவுமானது பிழையை சரிசெய்வதற்கு மேற்கொண்ட வரவு மற்றும் செலவுப் பெறுமதியுடனான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் ஒப்பீடு செய்யும் இயலுமை இழக்கப்படுகின்றது எனவும் மேலும் தெரிவிக்கிறேன். | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றின் தரவுகளானது திறைசேரி ஏடுகளின் பிரகாரம் காட்டப்படுதல் வேண்டும். |
| (iii) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் (SA-30) ரூபா 1,470,508 ஆக இருந்த போதிலும் நிதி | திறைசேரி ஏடுகளின் பிரகாரமான வைப்பு பெறுவனவுகளுக்கும் நிதி செயலாற்றல் கூற்றின் வைப்பு பெறுவனவுகளுக்குமிடையேயா | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றின் தரவுகளை திறைசேரி ஏடுகளின் |

| | | |
|---|---|---|
| செயலாற்றல் கூற்றில் அது ரூபா 485,884, ஆக அதாவது ரூபா 984,624 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ன வித்தியாசமாகிய ரூபா 984,624 வர்த்தக கப்பல்துறை செயலாளர் அலுவலகம் CIGAS இல் கணக்கீடு செய்யும் போது மேற்கொண்ட பிழைகள், காணப்படும் அரசாங்க அமைச்சுக்களின் மீதிகளை மாற்றுதல், பிழையாக கணக்கீடு செய்த பெறுமதிகள் திறைசேரியின் மூலம் பிழைகளை சரி செய்தல்களினால் உருவாகியுள்ளது.<br>வர்த்தக கப்பல்துறை செயலாளர் அலுவலவகத்தின் பணத்தை எங்கள் அமைச்சின் வைப்புக் கணக்கின் CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கு கணக்கீடு செய்யும் போது பிழையாக எங்கள் அமைச்சின் வைப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டதாகும். அப்பிழை கணக்காண்டிற்குள் சரி செய்யப்பட்டுள்ளது.<br>காணப்படுகின்ற அரசாங்க அமைச்சுக்களின் வைப்பு மீதிகள் மாற்றமடைந்திருந்தும் கட்டுநிதி மீதியானது இந்த அமைச்சிற்கு மாற்றப்பட்டிருக்காததனால் நிதி செயலாற்றல் கூற்றிற்கு அம்மீதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>வைப்பு கணக்கு தொடர்பான பிழைகள் கணக்கீடு செய்யப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது.<br>திறைசேரியினூடாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 425 இற்குமான காரணம் பிழைகளை சரி செய்தல்களாகும். எனவே அப்பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றினைத் தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | பிரகாரம் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் (SA- 30) வைப்பு கொடுப்பனவுகள் ரூபா 1,512,284 ஆக இருந்த போதிலும் அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 485,884 ஆக அதாவது ரூபா 1,026,400 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரமான வைப்பு கொடுப்பனவுகளுக்கும் நிதி செயலாற்றல் கூற்றின் வைப்பு கொடுப்பனவுகளுக்குமிடையே யான வித்தியாசமான ரூபா 1,026,400 தொகைக்கு வர்த்தக கப்பல்துறை செயலாளர் அலுவலகம் CIGAS இல் கணக்கீடு செய்யும் போது மேற்கொண்ட பிழைகள் காணப்பட்ட அரசாங்க அமைச்சுக்களின் மீதிகளை மாற்றுதல் வைப்புக் கணக்கிற்குரிய பிழைகள், பிழையாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதிகள் திறைசேரியின் மூலம் பிழைகளை சரிசெய்தல்களிலிருந்து உருவாகியுள்ளது. வர்த்தக கப்பல்துறை செயலாளர் அலுவலகத்தின் பணம் எங்கள் அமைச்சின் வைப்புக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதானது அந்த அலுவலகத்தினால் CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கு கணக்கீடு செய்யும் போது தவறுதலாக எங்கள் அமைச்சின் வைப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டமையாகும். அத்தவறு கணக்காண்டிற்குள் சரிசெய்யப்பட்டுள்ளது. திறைசேரியினூடாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 425 தொகைக்கான காரணம் பிழையை சரி செய்தலாகும். எனவே அப்பெறுமதிகள் நிதி செயலாற்றல் கூற்றினை தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றிலுள்ள தரவுகளை திறைசேரி ஏடுகளின் பிரகாரம் காட்டுதல் வேண்டும். |

(v) கட்டுநிதி இணக்கக் கூற்றின் கூட்டுமொத்தமாக ஏனைய தலைப்புக்களினால் அமைச்சின் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்ட முற்பணப் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 11,049,908 ஆகக் காட்டப்பட்டிருந்தும் திறைசேரி படிவம் SA-51 இற்கு இணங்க சரியான பெறுமதி ரூபா 7,845,601 ஆக இருந்ததனால் மொத்த பெறுமதி ரூபா 3,204,307 அதிகரித்துகக் காட்டப்பட்டிருந்தது.

(vi) ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடப்படும் நிறுவனத்தினால் முற்பணக்கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்களின் பெறுமதி ரூபா 5,299,093 தொகையானது பரீட்சை மீதிக்கு இணங்க காட்டப்பட்டிருந்தும் இணக்க கூற்றின் கூட்டலாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(vii) ஏனைய தலைப்புக்களினால் அறிக்கையிடுகின்ற நிறுவனம் தொடர்பாக வைப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 984,599 தொகையானது திறைசேரி படிவம் SA-30 மற்றும் பரீட்சை மீதிக்கு இணங்க கட்டுநிதி இணக்க கூற்றின் கூட்டலாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(viii) ஏனைய தலைப்புக்களினால் முற்பணங்கள் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுவைத்தல்கள் திறைசேரி படிவம் SA-51 இற்கு இணங்க ரூபா 3,462,970 ஆக இருந்த

நிதி செயலாற்றல் கூற்றிக்கு வழங்கிய பதிலுக்கு உங்களின் கவனம் கோரப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது இந்த அமைச்சிற்கு காணப்பட்ட 02 இராஜாங்க அமைச்சுக்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஒன்றிணைப்பிற்கு இணங்க பொருத்தமான வகையில் செம்மையாக்கல் செய்யப்பட்டு கட்டுநிதி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது என தெரிவிப்பதுடன் கட்டுநிதி இணக்கக்கூற்றின் மீதியானது ரூபா 20,709,725,224 தொகை சரியானது எனவும் தெரிவிக்கிறேன்.

திணைக்கள ஏடுகளை கடைசியாக சரிசெய்தலானது திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்கையில் சரியான மீதி தயாரிக்கப்படுவதனால் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செம்மையாக்கல்கள் திறைசேரிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் இணக்க கூற்றில் கழித்தல்களாக ரூபா 9,421,294 காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க இணக்கக் கூற்றில் ரூபா 5,958,324 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ix) | பரீட்சை மீதிக்கு இணங்க ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பணங்கள் பி கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 8,053,111 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி கட்டுநிதி இணக்க கூற்றில் கழித்தல்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றல் கூற்றிற்கு வழங்கிய பதிலுக்கு உங்களின் கவனம் கோரப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது இந்த அமைச்சிற்கு காணப்பட்ட 02 இராஜாங்க அமைச்சுக்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஒன்றிணைப்புக்கு இணங்க பொருத்தமான வகையில் செம்மையாக்கல்கள் செய்து கட்டுநிதி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. என தெரிவிப்பதுடன் கட்டுநிதி இணக்க கூற்றின் மீதியானது ரூபா 20,709,725,224 தொகை சரியானது எனவும் தெரிவிக்கிறேன். | திணைக்கள ஏடுகளை கடைசியாக சரிசெய்தலானது திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்கையில் சரியான பரீட்சை மீதி தயாரிக்கப்படுவதனால் அதற்கிணங்க சரியான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் திறைசேரிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (x) | ஏனைய தலைப்புக்களினால் அறிக்கையிடுகின்ற நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற வைப்புக் கொடுப்பனவுகள் திறைசேரி படிவம் SA-30 இற்கு இணங்க ரூபா 1,026,375 ஆக இருந்த போதிலும் இணக்க கூற்றில் அது கழித்தல்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றல் கூற்றிக்கு வழங்கிய பதிலுக்கு உங்களின் கவனம் கோரப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது இந்த அமைச்சிற்கு காணப்பட்ட 02 இராஜாங்க அமைச்சுக்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஒன்றிணைப்பிற்கு இணங்க பொருத்தமான வகையில் செம்மையாக்கல்கள் செய்து கட்டுநிதி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது என தெரிவிப்பதுடன் கட்டுநிதி இணக்க கூற்றின் மீதியானது ரூபா 20,709,725,224 தொகை சரியானது எனவும் தெரிவிக்கிறேன். | திணைக்கள ஏடுகளை கடைசியாக சரிசெய்தலானது திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்கையில் சரியான பரீட்சை மீதி தயாரிக்கப்படுவதனால் அதற்கிணங்க சரியான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் திறைசேரிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் முற்பணங்கள் பெறுவனவுகள் ரூபா 4,102,876 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதிக்கு இணங்க அப்பெறுவனவுகள் ரூபா 23,115,251 ஆக இருந்தது. அதற்கிணங்க காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 19,012,375 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | அமைச்சின் பரீட்சை மீதியினுள் காணப்பட்ட விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கடன் மீதியினை பொறுப்பேற்பதற்குரிய கொடுக்கல் வாங்கல்களானது அப்பொறுப்பேற்பின் போது இடம்பெற்ற தவறுகளைப் போல அத்தவறுகளைச் சரிசெய்தல் மற்றும் காணப்பட்ட பண்டகசாலை வசதிகள், கொள்கலன்துறை, துறைமுக வழங்கல் வசதிகள், படகு மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கடன் மீதியினை பொறுப்பேற்கும் போது இடம்பெற்ற தவறுகளை சரிசெய்தல் கணக்கின் பதிவுகளும் உள்ளடங்கியுள்ளன. மேலும் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களின் கட்டுநிதி மீதியும் காசு மீதியும் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்படாததனால் உரிய அனைத்து செம்மையாக்கல்களையும் மேற்கொண்டு கணக்கு தகவல்களை ஒப்பீட்டு ரீதியான தன்மையை பாதுகாக்கும் வகையில் கணக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திணைக்கள ஏடுகளை கடைசியாக சரிசெய்தலானது திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்கையில் சரியான பரீட்சை மீதி தயாரிக்கப்படுவதனால் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் திறைசேரிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவு செய்தல்களின் கீழ் முற்பணக் கொடுப்பனவுகள் | காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள முற்பணக் கொடுப்பனவு பெறுமதிகள் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள முற்பணக் | திணைக்கள ஏடுகளை கடைசியாக சரிசெய்தலானது திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| ரூபா 4,288,526 ஆக காட்டப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்விற்குச் சமரப்பித்த பரீட்சை மீதிக்கு இணங்க அக்கொடுப்பனவுகள் ரூபா 23,300,901 ஆக இருந்தது. அதற்கிணங்க காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 19,012,375 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கொடுப்பனவு பெறுமதிகளிலிருந்து வித்தியாசமடைவதற்கு காரணமாக இருந்தது அமைச்சின் பரீட்சை மீதியினுள் காணப்பட்ட விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கடன் மீதியினைப் பொறுப்பேற்பதற்குரிய கொடுக்கல் வாங்கல்களானது அப்பொறுபேற்பின் போது இடம்பெற்ற தவறுகளைப் போல காணப்பட்ட பண்டசாலை வசதிகள் கொள்கலன் துறை, துறைமுகங்கள் வழங்கல் வசதிகள், மற்றும் படகுகள், கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கட்டுநிதி மீதி இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்படாததனால் பொருத்தமான வகையில் அனைத்து செம்மையாக்கல்களையும் மேற்கொண்டு கணக்கு தகவல்களின் ஒப்பீட்டு ரீதியான தன்மையை பாதுகாக்கும் வகையில் கணக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்கையில் சரியான பரீட்சை மீதி தயாரிக்கப்படுவதனா ல் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் திறைசேரிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(i)** | **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | **நட்டம் தொடர்பான பதிவேடு நி.பி 110(1) படிவம்** | |
| | நிதிப்பிரமாணம் 110(1) இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு | இந்த அமைச்சின் வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகுவதனால் | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள |

| | | |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்படுகின்ற சேதங்கள் சம்பந்தமான சேதங்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுவதுடன் அப்பதிவேடு 2023-04-24 ஆந் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன்.<br>அந்த சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் மற்றும் நி.பி 110(1) படிவத்திற்கு இணங்க மேற்கூறிய படிவத்தின் 06, 08, 10 மற்றும் 11 ஆம் இலக்கங்களின் கீழ் குறிப்பிட்ட விடயங்கள் மாத்திரம் அமைச்சின் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை.<br>எனவே தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அமைச்சின் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் நி.பி 110(1) படிவத்திற்கு இணங்க திருத்தப்பட்டு நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மேலும் குறிப்பிடுகிறேம். | படிவங்களுக்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |

**(ii) பிணைப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரகள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழிர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கிய பிணைப்பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டினை தயாரித்து பேணுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| **(iii)** | **வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்** | | |
| | நிதிப்பிரமாணம் 1645(ஆ) இன் பிரகாரம் திணைக்கள வாகனங்கள் ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது ஒரு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தரின் பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டியதுடன் அந்த உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் உள்ள ஒவ்வொரு வாகனத்திற்காகவும் தமது அலுவலகத்தில் 267 ஆவது பொது படிவத்திற்கு இணங்க வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்தினை வைத்து நாளாந்தம் அதில் எழுதப்பட வேண்டிய அனைத்து குறிப்புக்களும் எழுதப்படுகின்றது என்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனினும் அமைச்சின் 25 சம்பவக் குறிப்பு புத்தகம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது வாகனங்கள் தொடர்பான விபரங்களை முழுமையற்று பேணுதல், நுகரப்படுகின்ற எரிபொருளின் அளவு பதியப்படாமை, வருடாந்த அனுமதிப்பத்திரம் நாளதுவரையாக்கப்படாமை, வாகனத்தின் பொறுப்பாளர் மாற்றப்படுதல் நாளதுவரையாக்கப்படாமை, பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பு பதியப்படாமை, பரீட்சிப்பு | இந்த அமைச்சிடம் 45 வாகனங்கள் காணப்படுவதுடன் அந்த அனைத்து வாகனங்களுக்குமாக 267 ஆவது பொது படிவத்திற்கு இணங்க தனித்தனியாக சம்பவக் குறிப்பு புத்தகம் பேணப்பட்டு வருகின்றது. அந்த ஒவ்வொரு வாகனத்திற்கும் மேற்கொள்ளப்படுகின்ற பழுதுபார்த்தல்கள்/ பராமரிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக (பழுது பார்த்தல், தவணைக்கான சேவைகளை நிறைவேற்றுதல், பெற்றறரிகளை புதிதாக வைத்தல், டயர் போடுதல்) நாளாந்தம் பதிவுகள் இடப்படுகின்றது என்பதனை தயவாக குறிப்பிடுகின்றேன். | நிதிப்பிரமாணம் 1645 (ஆ) இல் காட்டப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 படிவத்திற்கு இணங்க வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் அனைத்து வாகனங்கள் சம்பந்தமாகவும் பேணப்படுதல் வேண்டும். |

உத்தியோகத்தர்களின் குறிப்புக்கள் காட்டப்பட்டிருக்காமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தொடக்க வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீடு ஏசீஏ 1 (II) இற்கு இணங்க ரூபா 12,000,000,000 இனை காட்டியிருந்தும் 2022 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச் சட்டத்திற்கு இணங்க திருத்தப்பட்ட பாதீட்டின் 20.03.02.08 ஆம் வருமான குறியீட்டின் கீழ் காட்டப்படுவதாவது ரூபா 16,500,000,000 தொகையாகும். அதற்கிண்ஙக தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 4,500,000,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி அமைச்சு இரத்துச் செய்யப்பட்டதோடு சிவில் விமான சேவைகள் அதிகார சபை 2022 இன் நான்காவது காலாண்டின் போது இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் கீழ் காணப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது இந்த அமைச்சின் கீழ் 03 மாதங்கள் அளவான குறுகிய காலத்திற்கு மாத்திரமே 2022 ஆம் ஆண்டில் செயற்பட்டிருந்தது. சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது வருமான மதிப்பீடாக சமர்ப்பித்த பெறுமதிகளுக்கும் தேசிய பாதீட்டில் காட்டிய பெறுமதிக்குமிடையே வித்தயாசம் காணப்படுகின்றது என உங்களைப் போல் எங்களினாலும் அவதானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இது சம்பந்தமாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடி சிவில் விமான சேவைகள் | ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க வருமான குறியீட்டின் கீழ் சரியாக தொடக்க வருமான மதிப்பீட்டினையும் திருத்திய வருமான மதிப்பீட்டினையும் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகார சகை சமர்ப்பித்த பெறுமதிகளையும் தேசிய பாதீட்டின் வருமான மதிப்பீட்டினையும் ஒரே பெறுமதிக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வருமான மதிப்பீட்டினை முடியுமான அளவுக்கு நடைமுறைச் சாத்தியமாக சமர்ப்பிப்பதற்கும் வருமான மதிப்பீட்டினை முறைப்படியாக திருத்தம் செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | வருடாந்த திருத்திய பாதீட்டின் பிரகாரம் தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 16,500,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்தும் திருத்திய வருமான மதிப்பீட்டின் கீழ் ஏசீஏ 1 (II) படிவத்திற்கு இணங்க அந்த மதிப்பீடு ரூபா 23,000,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு தொடக்க வருமான மதிப்பீட்டினை ரூபா 6,500,000,000 பெறுமதியால் திருத்தம் செய்தல் நி.பி 85(2)(ஆ) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதற்கான காரணத்துடன் அது பற்றி பொருளாதார விவகாரங்கள் மற்றும் அரசாங்க நிதிக்கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டு திருத்தம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது எங்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டு மிகவும் குறுகிய காலமே கடந்திருந்ததனால் அப்பிழையினை சரிசெய்வதற்கு போதியளவு காலம் இருக்கவில்லை. எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நி.பி 85(2)(ஆ) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதற்கான காரணத்துடன் அது பற்றி பொருளாதார விவகாரங்கள் மற்றும் அரசாங்க நிதி கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டு திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | தொடக்க வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்படுகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதற்கான காரணங்களுடன் அதுபற்றி பொருளாதார விவகாரங்கள் மற்றும் அரசாங்க நிதிக்கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டு திருத்தம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அத்தியவசியமாக செலவு செய்ய வேண்டிய செலவு விடயங்களை இனங்கண்டு நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் காரணமாக 05 மூலதன செலவு விடயங்களின் மொத்தமாக ரூபா 147,450,000 நிதி ஏற்பாடும் 02 மூலதன செலவு விடயங்களின் மொத்தமாக ரூபா 270,000 நிதி ஏற்பாடும் எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | 176-1-2-0-1403-0/11 மற்றும் 176-1-7-0-1203-0/11 ஆம் இலக்க செலவு விடயங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையினால்இ மின்சாரம் மற்றும் நீருக்காக பட்டியல்கள் சமர்ப்பிக்காயையும் 176-1-2-0-2002-0/11, 176-1-8-0-2001-0/11 மற்றும் 176-1-8-0-2002-0/11 ஆம் செலவு விடயங்களில் எதிர்பார்த்தவாறு செலவு செய்வதற்கு முடியாமையும் 176-2-4-24-2506-0/17 ஆம் செலவு விடயத்தில் நாட்டிற்குள் காணப்பட்ட டொலர் தட்டுப்பாட்டின் காரணமாக இரும்பு இறக்குமதிக்காக நாணயக் கடிதத்தினைத் திறப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு முடியாமையும் அதனால் ஒட்டுமொத்த செயற்திட்ட கிரயத்தில் 50% இற்கு மேற்பட்ட அளவில் உள்நாட்டு இரும்பு உற்பத்தி கடைகளின் இரும்புத் தகடுகளை பயன்படுத்த வேண்டியிருந்ததனால் செயற்திட்டத்தின் கட்டமைப்பினை மூன்று தடவைகள் மீளமைப்புச் செய்ய வேண்டியிருந்தமையும் விலை முரண்களின் காரணமாக விலையை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துமாறு ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டுகோள் அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எனவே 2022 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட விலையினை அதிகரிக்கும் தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தாமை மற்றும் 176-2-10-1-2506-0/17 செலவு விடயத்தில் EXIM வங்கியினால் கடனை வழங்குவதற்கான அடிப்படைத் தகமைகளை பரீட்சிக்கும் ஆவணத்திற்கும் கடன் பணத்தை அதிகரிப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2022-11-05 ஆந் திகதி சமர்ப்பித்த கடிதத்திற்கும் அங்கீகாரம் வழங்கப்படாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்படவில்லை. | |
| (ஆ) | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியாக முன்அறிதல் மேற்கொளப்படாமையின் காரணமாக 08 மூலதன செலவு விடயங்களின் ரூபா 3,400,528,713 தொகை மற்றும் 14 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 4,601,679 தொகையுமாக தேறிய நிதி ஏற்பாட்டில் 30 சதவீதத்திலிருந்து 99 தசவீதம் வரையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 176-1-1-0-1001-0/11 செலவு விடயத்தில் 2022 ஆம் ஆண்டின் போது ஒரு அமைச்சர் இல்லாமையும் இருந்த அமைச்சரும் சம்பளம் பெற்றுக்கொள்ளாமை 176-1-1-0-1203-0/11 செலவு வியடத்தின் உத்தியோகத்தர்கள் சீருடைப் படியினை வேண்டிக் கொள்ளாமை 176-1-1-0-1403-0/11 செலவு விடயத்தில் 2022-05-20 ஆந் திகதிக்கு முன்னர் இருந்த அமைச்சரின் உத்தியோகபூர்வவ | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

இல்லங்களின் நீர் மற்றும் மின்சார செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்காமை, 176-1-1-0-1302-0/11, 176-1-8-0-1302-0/11, 176-1-8-0-1303-0/11, 176-1-1-0-2002-0/11, 176-1-9-0-2002-0/11 ஆகிய செலவு விடயங்களில் செலவு செய்யும் தேவைப்பாடு உருவாகியிருக்காமை, 176-1-2-0-1203-0/11, 176-1-2-0-1205-0/11, 176-1-2-0-1508-0/11, 176-1-9-0-1203-0/11, 176-1-9-0-1205-0/11, 176-1-9-0-1302-0/11, 176-1-9-0-1403-0/11, 176-1-9-0-1506-0/11, 176-1-9-0-2401-0/11 ஆகிய செலவு விடயங்களில் எதிர்பார்த்தவாறு செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருக்காமை, 176-2-4-24-2506-0/12 ஆம் செலவு விடயத்தில் டொலர் தட்டுப்பாட்டின் காரணமாக இரும்பு இறக்குமதிக்காக நாணயக் கடிதத்தினை திறப்பது சிக்கலாக இருந்ததன் அடிப்படையில் செயற்திட்ட கிரயத்தில் 50% இற்கு மேற்பட்ட அளவானவை உள்நாட்டில் உற்பத்தி சேய்த தகட்டினை பயன்படுத்த வேண்டி ஏற்பட்டதனால் செயற்திட்டத்தின் கட்டமைப்பினை மூன்று தடவைகள் மீளமைப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டதன் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்தன. அதனால் எதிர்பார்த்தவாறு கொடுப்பனவு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் விலை முரண்களின் காரணமாக விலையை அதிகரிப்பதற்கான அங்கீகாரம் இல்லாததன் அடிப்படையில் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படாமை 176-2-4-25-2506-0/12, 176-2-4-25-2506-0/17 ஆகிய செலவு விடயங்களில் சாத்தியவள ஆய்வு வரைபு அறிக்கையும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் வரைபும் செயற்திட்ட ஆலோசகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளமை, 176-2-10-1-2302-0/12 செலவு விடயத்தில் EXIM வங்கியினால் கடன் வழங்குவதற்காக அடிப்படைத் தகமைகளைப் பரீட்சிக்கும் ஆவணங்களுக்கும் கடன்பணத்தை அதிகரிப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2022-11-05 ஆந் திகதி சமர்ப்பித்த கடிதத்திற்கும் அங்கீகாரம் வழங்கப்படாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்படாமை மற்றும் 176-2-11-1-2506-0/11 செலவு விடயத்தில் 03/2022 ஆம் இலக்க செலவு விடயத்தின்

| | | | |
|---|---|---|---|
| | | பின்னிணைப்பு I இல் ஆரம்பிக்கப்படாத புதிய செயற்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு தெரிவித்திருந்தமை மற்றும் 2281/41 ஆம் இலக்க 27-05-2022 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் இலங்கை முதலீட்டுச் சபையினை முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமை. | |
| (இ) | தொடக்க மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கூடுதல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக 14 செலவு விடயங்களின் மொத்தம் ரூபா 14,097,049 தொகையான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | 176-1-1-0-1203-0/11 செலவு வியடத்தில் உத்தியோகத்தர்கள் சீருடைப் படியினை வேண்டிக் கொள்ளாமை 176-1-1-0-1401-0/11 செலவு விடயத்தில் உத்தியோகத்தர்களினால் போக்குவரத்து படிகளுக்கும் பதிலாக உத்தியோகபூர்வ வாகனங்களை வேண்டிக் கொண்டமை, 176-1-1-0-1408-0/11 செலவு விடயத்தில் 1/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க புதிய குத்தகை உடன்படிக்கைகளை மேற்கொள்வதனை நிறுத்திவைத்தல் 176-1-1-0-1403-0/11 செலவு விடயத்தில் 2022-05-20 ஆந் திகதிக்கு முன்னர் இருந்த அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நீர் மற்றும் மின்சார செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்காமை, 09 செலவு விடயங்களுக்காக அமைச்சு ஆண்டு முழுவதும் செயற்படும் என்ற எதிர்பார்ப்பில் வருடாந்த பாதீட்டில் நிதி | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2277/53 ஆம் இலக்க 2022-04-28 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசாங்க அமைச்சு இரத்துச் செய்யப்பட்டதனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்படுதல், மற்றும் 176-1-8-0-1302-0/11 ஆம் செலவு விடயத்தில் செலவுகள் எதிர்பார்த்த மட்டத்தினை விட குறைவடைதல். | |
| (ஈ) | 176-2-4-25-2506-0/12 மற்றும் 176-2-4-25-2506-0/17 ஆம் செலவு விடயங்களுக்காக (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் கீழ் முறையே ரூபா 637,178,000 மற்றும் ரூபா 76,461,360 தொகையான மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 506,136,839 மற்றும் ரூபா 46,331,709 தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 31 சதவீதம் அல்லது ரூபா 231,041,161 மற்றும் 46 சதவீதம் அல்லது ரூபா 40,129,651 தொகையான மேலதிக நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சாத்திவள ஆய்வு வரைபு அறிக்கை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் வரைபு செயற்திட்ட ஆலோசகருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த அறிக்கையானது கண்காணிப்பிற்காக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 நவம்பர் மாதம் நடைபெற்ற முதலாவது தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கையின் கருத்துரைகள் இறுதி அறிக்கைக்கு உள்ளடக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து சாத்தியவள ஆய்வு அறிக்கை மற்றும் சுற்றாடல் தாக்க அறிக்கைக்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் | நி.பி 50 இற்கு இணங்க சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொடுப்பனவு செய்வதற்கு முடியாமையால் 176-2-4-25-2506-0/12 மற்றும் 176-2-4-25-2506-0/17 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் முறையே 31 தசவீதம் மற்றும் 46 தசவீதம் சேமிப்பாக இருந்தது. | |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| கணக்காய்வு தெரிவுப் பரீட்சிப்பிற்கு இணங்க 2022 ஆம் ஆண்டிற்காக 65 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 335,297,489 தொகையான பொறுப்புக்கள் 2023 முதல் 02 மாதங்களின் போது தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் இச்செலவுகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 06 செலவு விடயங்கள் தொடர்பான பொறுப்புக்கள் ரூபா 331,168,236 தொகையானது சேமிப்பினை மிகைத்திருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களுக்குரிய விலைப்பட்டியல்கள் 2022-12-31 ஆந் திகதி வரையும் கணக்குப் பிரிவிற்கு செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததனால் 2022 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் பதிவேட்டிற்கு மேற்கூறிய விலைப்பட்டியல்கள் உள்ளடக்கப்படவில்லை. அந்த விலைப்பட்டியல்கள் 2023 ஆம் ஆண்டின் போதே கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டன. அதனால் 2022 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் பதிவேட்டில் பொறுப்புக்களாக இனங்காணப்படவில்லை. 2022 ஆம் அண்டு தொடர்பான 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விலைப்பட்டியல்களும்2022-12-31 ஆந் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன. | நி.பி 94 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீட்டு நிதி எற்பாடு இல்லாது பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருத்தல். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் கோவை** | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 128(2)(இ) பந்தி | நிலுவையான அரசாங்க வருமானங்களின் அரையாண்டு அறிக்கையினை தயாரித்து அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2022 யூன் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதி தொடர்பான அந்த அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 128(2)(இ) சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது எங்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டு மிகவும் சிறிய காலமே கடந்துள்ளதனால் நிலுவை வருமான அறிக்கையினை தயாரிப்பதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்கிறேன். | நிலுவையான அரசாங்க வருமானங்களின் அரையாண்டு அறிக்கையினை தயாரித்து அவற்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 1646 ஆம் பந்தி | அமைச்சின் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகளானது பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் | நி.பி 1646 அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்ட நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதிகளில் ஒரு பகுதி 2022-11-17 ஆந் திகதி அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள | அமைச்சின் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகளை பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் மூலப் பிரதிகளுடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு |

| | | |
|---|---|---|
| அமைச்சின் 47 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | து. ஏனைய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தற்பொழுது பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் துரிதமாக கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) காங்கேசன் துறை துறைமுகத்தினை மறுசீரமைப்புச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய நிறுவனத்திற்கும் மற்றும் ஏற்றுமதி EXIM வங்கிக்குமிடையே அமெரிக்க டொலர் 45.27 மில்லியன் கடன் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு டொலர் கடன் உடன்படிக்கையில் 2018 சனவரி 10 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க இச்செயற்திட்டத்தின் | (அ)(ஆ) இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்குமிடையே டொலர் கடன் நிவாரண உடன்படிக்கை 2018 சனவரி மாத்தில் கையொப்பமிடப்பட்டது. அக்கடன் பணத்தை அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்காக கடனை விடுவிக்கும் உடன்படிக்கையானது 2018 ஒக்தோபர் மாத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கை துறைமுக அதிகார சபைக்குமிடையே கையொப்பமிடப்பட்டது. நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆலோசகர் ஒருவரினை தெரிவுசெய்வதற்காக முன் தகமைகளைக் கோருதல், குறுகிய பட்டியலிடப்பட்ட கேள்விதாரர்களுக்கிடையே கேள்விகளைக் கோருதல், கலந்துரையாடல்களை நடாத்துதல், பொருத்தமான ஆலோசகர்களைத் | திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னர் அச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தி செல்லுகின்ற போது தேவைப்படக் கூடிய அங்கீகாரங்கள் மற்றும் இணக்கபாடுகள் தொடர்பாக ஏற்கனவே கவனித்துப் பார்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 ஆந் தகிதி வரையும் இச்செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவுசெய்தல், நிபந்தனைகளை கலந்துரையாடுகின்ற அதேவேளை ஆலோசனை உடன்படிக்கைகளை தயாரித்தலும் கையொப்பமிடுதலும், கீழே குறிப்பிட்ட தொடக்க வேலைத்தள புலனாய்வு நடவடிக்கை கட்டமைப்பினை திட்டமிடுதல், திட்டங்களை வரைதல் பொருள் விபரக்குறிப்பு, அளவீட்டுப் பத்திரம் செயற்திட்ட அறிக்கை (DPR) என்பவற்றை மீளாய்வு செய்தல் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் (ஐந்து அலகுகளைக் கொண்டவை) மற்றும் முன்தகமை ஆவணங்களை தயாரித்தல் என்பவைகளை உள்ளடக்கிய அலோசனை செயற்பாடுகளை நிறைவேற்றுதலினை உள்ளடக்கி ஏனைய பல கட்டாய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டில் காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 797,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடானது பிரதான செலவுக்காக ரூபா 700 மில்லியனும் வரிக்காக ரூபா 97 மில்லியனுமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மேலே வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டுப் பணமாகிய ரூபா 700,000,000 | மேலே குறிப்பிட்ட அனைத்து செயற்பாடுகளும் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள்ளன. திருத்திய விபரமான செயற்திட்ட அறிக்கையுடன் முன் தகமை ஆவணங்கள், அந்த இந்தியாவின் EXIM வங்கியினால் அங்கீகாரத்திற்காக 2022 சனவரி 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. 2022 நவம்பர் மாத்தின் போது விபரமான செயற்திட்ட அறிக்கைக்காக இணக்கப்பாடு கிடைத்திருந்தும் 15 மாதங்கள் கடந்திருந்த | -மேற்படி- |

தொகையில் செலவு செய்யப்பட்டது ரூபா 55,185,115 ஆகும். அதற்கிணங்க 8 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

போதிலும் முன் தகமைகளுக்கான இணக்கப்பாடு இன்று வரை கிடைத்திருக்கவில்லை. இந்த இரண்டு ஆவணங்களுக்காக இணக்கப்பாடு இல்லாது நிர்மாண ஒப்பதக்காரருக்காக கேள்விகளை கோருதலினை ஆரம்பிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு இயலுமை இருக்கவில்லை. மேலே குறிப்பிட்ட இரண்டு ஆவணங்களுக்காகவும் இந்தியாவின் EXIM வங்கியின் இணக்கப்பாடு கிடைத்ததன் பின்னர் நிர்மாண ஒப்பந்தத்திற்கான கேள்விதாரர்களை குறும்பட்டியலிடுவதற்கு முன்னர் முன்தகமைகள் கோரப்பட்டதுடன் முன்தகமை நடமுறையின் கீழ் குறும்பட்யலிடப்பட்ட கேள்விதாரர்களுக்கு மத்தியில் மாத்திரம் கேள்வி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் கேள்வி கோரும் கட்டத்திலேயே அவர்களின் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு நிர்மாண ஒப்பந்தங்களை வழங்குவதற்காக பொருத்தமான கேள்வி மனுதாரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை துறைமுக அதிகார சபைக்கான நிர்மாண ஒப்பந்தத்திற்காக கேள்விகளை கோருவதனை ஆரம்பிப்பதற்கான இயலுமையானது இந்த அனைத்து செயற்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னரே கிடைக்கின்றது. 2022-10-25 ஆந் திகதிய அமைச்சரவைத்

தீர்மானத்திற்கு இணங்க டொலர் கடன் நிவாரத்தினை ஐக்கிய குடியரசு டொலர் 61.5 மில்லியன் வரை அதிகரிக்குமாறு துறைமுக அதிகார சபை வரிசை அமைச்சினூடாக இந்தியாவின் EXIM வங்கியிடம் வேண்டிக் கொண்டுள்ளது. இன்றுவரை அதற்கு பதில் கிடைக்காததனால் இலங்கை துறைமுக அதிகார சபை இது தொடர்பாக அவசர கூட்டத்தினை கூட்டுமாறு வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திடம் வேண்டிக் கொண்டிருந்ததுடன் அதற்கான ஒரு திகதி கிடைக்கும் வரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. முழுச் செயற்திட்ட கிரயத்தினை உள்ளடக்குவதற்கு அங்கீகாரம்/ இணக்கப்பாடு இல்லாததனை முன்னிட்டு நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான இயலுமை இல்லாத நிலைமை மீண்டும் உருவாகியுள்ளது. எனவே அரசாங்க மட்டத்தில் எடுக்கக் கூடியதாக உள்ள அங்கீகாரம்/ இணக்கபாடு/ தீர்மானம் இல்லாது செயற்திட்ட நடவடிக்கைகளை தற்பொழுது நிறுத்தும் நிலைமைக்கு மாறியுள்ளது.

## 4 நல்லாட்சி

### 4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக அமைச்சு செயலாளரின் பிரசைகள் சேவைநாடுனர் நியதிச்சட்டத்தினை அறிமுகப்படுத்துதல் என்ற தலைப்பில் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் நியதிச்சட்டத்தினை தயாரித்தல் மற்றும் அமுல்ப்படுத்தும் நடவடிக்கையை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிபபீடு செய்வதற்காக அனைத்து அமைச்சுக்களினாலும் அதற்காக ஒரு நடைமுறையினைத் தயாரித்தல் அவசியமானதுடன் இதன் போது உரிய உரிய நிறுவனத்தினால் திட்டமிட்டவாறு நியதிச்சட்டத்தினை தயாரித்தலும் அமுல்ப்படுத்தலும் மேற்கூறிய சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் தரமிக்கதாகவும் வழங்குவதனை உறுதிப்படுத்தியுள்ளதா என்பதனை கண்காணிக்கும் வகையில் மேற்பார்வை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல் வேண்டும். அதற்கிண்ஙக இந்த அமைச்சில் 2021 ஆம் ஆண்டின் போது காலாண்டு ரீதியாக மதிப்பீடு | 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் பிரசைகள் சேவை நாடுனர் நியதிச்சட்டத்தினை கண்காணிக்கும் வகையில் மேற்பார்வை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்த வேண்டியதுடன் அதற்காக 2021 ஆம் ஆண்டின் போது காலாண்டுரீதியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இந்த அமைச்சின் ஒவ்வொரு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் காலாண்டிற்குரிய தகவல்களை பரீட்சித்த போது திருத்தங்கள் தேவையற்றது என ஒவ்வொரு பிரிவின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு நியாயமான காலப்பகுதிக்குப் பின்னர் மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் பொருத்தமானதாகும். அக்காலப்பகுதிக்குள் அந்த மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இரண்டு உத்தியோகத்தர்களில் ஒரு நபர் முழு நேரமாக மற்றுமொரு நிறுவனத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதனாலும் தற்பொழுது விமான சேவைகள் பிரிவும் இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளதனாலும் அந்தப் பிரிவினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேற்கூறிய | சுற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு பிரசைகள்/ சேவைநாடுனர் நியதிச் சட்டத்தின் நடைமுறைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்லதலானது நியாயமான காலப்பகுதிக்குப் பின்னர் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டிற்காக மற்றும் 2023 யூலை 31 ஆந் தகிதி வரை பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச் சட்ட நடைமுறையானது மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் தரமிக்கதாகவும் மேற்கொள்வதற்காக இரண்டு புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டார்கள் என குறிப்பிடுகிறேன். அதற்கிணங்க கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு விமான சேவைகள் பிரிவினையும் உள்ளடக்கி 2023 யூன் மாதம் 30 ஆந் திகதியில் முடிவடையும் அலைரயாண்டிற்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீடானது 2023 ஒக்தோபர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதி வழங்கப்பட்ட 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் பிரசைகள்/ சேவைநாடுனர் நியதிச்சட்டமானது ஒரு இயக்கமுள்ள எண்ணக்கருவாக உள்ளதுடன் நியதிச்சட்டத்தினை ஆரம்பித்து அமுல்ப்படுத்தும் போது ஆய்வுகள் பகுப்பாய்வினைப் போல திட்டமிடுதலும் தொடர்ச்சியாக இடைவிடாது செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டிலிருந்து பண்டகசாலை வசதிகள், கொள்கலன் துறை, துறைமுக வழங்கல் வசதிகள், படகு மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க | 2022 ஆம் ஆண்டின் போது பண்டசாலை வசதிகள் கொள்கலன் துறை, துறைமுக வசதிகள் படகுகள் மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு இரத்துக் செய்யப்பட்டதுடன் அவ்வாறே 2022-07-22 ஆந் திகதி வழங்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அறிவுவித்தலுக்கு இணங்க அப்போது காணப்பட்ட விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் விமான சேவைகள் பிரிவானது துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டு துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் | நிறுவனத்தின் கடமைகள் விரிவடைவதன் அடிப்படையில் பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச் சட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சும் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் இரத்துச் செய்யப்பட்டு இந்த அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டதன் காரணமாக அதன் தூர நோக்கு, செயற்பணி மற்றும் நிறுவனத்தின் கடமைகள் விரிவடைந்ததனால் காணப்படுகின்ற பிரசைகள்/ சேவைநாடுனர் நியதிச்சட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த காலப்பகுதி தொடர்பாக கவனித்துப் பார்க்கும் போது அடிக்கடி இந்த அமைச்சுடன் ஏனைய பிரிவுகளை ஒன்றிணைத்தல் மற்றும் இரத்துச் செய்தலின் அடிப்படையில் தூர நோக்கும் செயற்பணியும் தனித்தனியாக பேணப்படுகின்றது எனவும் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டவாறு அதன் மூலம் கடமைகளும் விரிவடைந்துள்ளதனால் அக்கடமைகள் மாற்றமடைந்துள்ளதன் அடிப்படையில் அதற்குத் தேவையான திருத்தங்கள் பிரசைகள்∴சேவை நாடுனர் நியதிச்சட்டத்திற்கும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |

## 5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த பதவியணியினர் 97 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 72 ஆக இருந்ததனால் 15 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அதனுள் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 03 பதவிகள், மூன்றாம் மட்டத்திலுள்ள 01 பதவி, இரண்டாம் மட்டத்திலுள்ள 06 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 04 பதவிகள் வெற்றிடமாகக் | இந்த வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்காக அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் இரண்டாம் மட்டத்தின் மற்றும் ஆரம்ப மட்டத்தின் பதவிகளுக்காக வெற்றிடங்கள் காணப்படுகின்றன என தெரிவித்து அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் | அமைச்சின் செயற்பாடுகள் மற்றுமம் கடமைகளை மேற்கொள்வதற்கு போதியளவு பதவியணியினரைப் பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளுராட்சி அமைச்சிற்கு அடிக்கடி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் அரசாங்க துறையினுள் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் என்ற தலைப்பில் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு பதவியணியினரின் செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்திற்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்படுகின்ற வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையானது நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற அனைத்து பதவியணினர்களாலும் கையொப்பமிடுதல் 2018 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அமைச்சின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் இடம்பெறவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக செயலாற்றல் உடன்படிக்கை தயாரிக்கப்படவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் பரீட்சித்த போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் இதன் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் அலுவலக ஊழியர் சேவையின் மற்றும் சாரதிகள் சேவையின் ஊழியர்களின் செயலாற்றல் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் செயலாற்றல் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அந்த நடவடிக்கை 2023-09-15 ஆந் திகதியளவில் முடிவடையும் எனவும் தயவாக தெரிவிக்கிறேன். 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் உடன்படிக்கையானது 2023-01-01 ஆந் திகதியிலிருந்து 2023-12-31 ஆந் தகிதி வரை தயாரிக்கப்பட வேண்டியதனால் 2023 ஆம் ஆண்டு முடிவடைகையில் அனைத்து பதவியணியினர்களுக்காகவும் செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்குத் தேவையான முயற்சிகளை எதிர்காலத்தில் எடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய ஆண்டிற்காக ஒட்டுமொத்த பதவியணியினர்களும் செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடப்படுதல் வேண்டும். |